IASP 2025 GLOBAL YEAR
Pain Management, Research and Education in Low- and Middle-Income Settings

# FACT SHEET

# குறைந்த மற்றும் நடுத்தர வருமான அமைப்புகளுக்கான வலி கல்வி பாடத்திட்டம்: மேலும் திறன் மேம்பாட்டிற்கான இரண்டு மாதிரிகள்


**ஆசிரியர்கள்:**

- Nantthasorn Zinboonyahgoon [MD, Mahidol University, Thailand ][1]
- Pramote Euasobhon [MD, MMed, Mahidol University, Thailand ][1]
- Jocelyn Que [MD, MMed, University of Santo Tomas, Philippines][2]


வலி என்பது ஒரு மறைக்கப்பட்ட, ஆனால் குறிப்பிடத்தக்க உலகளாவிய உடல்நல பிரச்சினை. வயது, பாலினம், வருமானம், இனம், அல்லது புவியியல் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் இது அனைத்து மக்களையும் பாதிக்கிறது என்றாலும்; அதன் தாக்கம் உலகம் முழுவதும் சமமாக விநியோகிக்கப்படவில்லை [2]. குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் (எல்.எம்.ஐ.சி) அல்லது அமைப்புகளில், கடுமையான மற்றும் நாள்பட்ட வலியின் சுமை அதிகமாக இருக்கும், சிகிச்சை இன்னும் சவாலானது. இந்த சவால் சிறப்பு பராமரிப்பு மற்றும் வளங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் காரணமாக மட்டுமல்லாமல், வலி கட்டுப்படுத்துதல் தொடர்பான உடல்நல நிபுணர்களிடையே (எச்.சி.பி) மோசமான அறிவு மற்றும் அணுகுமுறைகளிலிருந்தும் எழுகிறது [4,5].

அனைத்து உடல்நல நிபுணர்களிடையே விரிவான வலி பற்றிய கல்வியின் அவசியத்தை உணர்ந்து, IASP ஆனது IASP கோர் பாடத்திட்டத்தின் நான்கு களங்களின் அடிப்படையில் ஒவ்வொரு உடல்நலம் தொடர்பான ஒழுக்கத்திற்கும் வலி பாடத்திட்ட வரைபடம் களை உருவாக்கியுள்ளது. [1,3] பாடத்திட்டங்களில் சிறிய வேறுபாடுகள் உள்ளன, ஏனெனில் அனைத்து துறைகளுக்கும் ஒரே வகை மற்றும் வலி தொடர்பான அறிவு மற்றும் திறன்கள் தேவையில்லை, அதாவது இயன்முறை மருத்துவர்களுக்கு மருந்தியல் பற்றிய ஆழமான அறிவு தேவையில்லை. இந்த பாடத்திட்டத்தின் நோக்கம் ஒரு

தொழில்முறை குழுவின் உறுப்பினர்களாக வலியின் அறிவியல் மற்றும் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதாகும் [3]. இருப்பினும், நாடுகளிடையே கல்வி கட்டமைப்பு, சுகாதார அமைப்புகள் மற்றும் சமூக கலாச்சார அமைப்புகளில் கணிசமான வேறுபாடுகள் உள்ளன. எல்.எம்.ஐ.சி.யைப் பொறுத்தவரை, பணியாளர்கள், உபகரணங்கள் மற்றும் நிதிகளில் உள்ள கட்டுப்பாடுகள் வலி சேவைகள், கல்வி மற்றும் பயிற்சியை கணிசமாக கட்டுப்படுத்துகின்றன.

இந்த ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சவால்களை நிவர்த்தி செய்ய உதவ, IASP பாடத்திட்டம் தகுதி அடிப்படையிலான கல்வியை நோக்கியதாக உள்ளது, இது அனைத்து அமைப்புகளிலும் பொருத்தமானதாகவும் பொருந்தக்கூடியதாகவும் இருக்கும். உள்ளூர் தொழில்முறை, தேவைகள் மற்றும் அந்த அமைப்பின் சுகாதார முன்னுரிமைகளுக்கு பொருத்தமான கல்வி மாதிரிகள் மற்றும் உத்திகளைப் பயன்படுத்தி இது திட்டங்களுக்குள் ஒருங்கிணைக்கப்படலாம். LMIC களில் இரண்டு முன்னோடி வலி கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை IASP பாடத்திட்டம் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி மாதிரிகளின் எடுத்துக்காட்டுகளாக நாங்கள் விவரிக்கிறோம். தென்கிழக்கு ஆசியாவில் எல்.எம்.ஐ.சி.களில் வலி கல்விக்கான ஆரம்ப மாதிரிகளில் சிரிராஜ் மருத்துவ வலி மேலாண்மை பயிற்சி மையம், பாங்காக், தாய்லாந்து மற்றும் மாஸ்டர் இன் வலி கட்டுப்பட்டுத் திட்டம், வலி மருத்துவ மையம், மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பீடம், சாண்டோ தாமஸ் பல்கலைக்கழகம் (UST), மணிலா, பிலிப்பைன்ஸ் ஆகியவை முறையே 1989 மற்றும் 2008 இல் நிறுவப்பட்டன.

**சிரிராஜ் மருத்துவ வலி மேலாண்மை பயிற்சித் திட்டம்**

சிரிராஜ் மருத்துவ வலி மேலாண்மை பயிற்சி மையம் மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனையில் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகளுக்கு பல்துறை வலி மேலாண்மை சேவைகளை வழங்குகிறது. சிக்கலான கடுமையான வலி, புற்றுநோய் வலி, நாள்பட்ட தசைக்கூட்டு வலி மற்றும் நரம்பியல் வலி உள்ளிட்ட பல்வேறு வலி நிலைமைகளை இந்த மையம் நிவர்த்தி செய்கிறது. இது ஒரு கல்வி

மையமாகவும் செயல்படுகிறது, ஆசிய-பசிபிக்கில் உள்ள LMICs இன் மருத்துவர்களுக்கு ஒரு வருட மருத்துவ வலி மேலாண்மை திட்டத்தை வழங்குகிறது. 2008 முதல் வலி ஆய்வுக்கான சர்வதேச சங்கம் (IASP) மற்றும் உலக மயக்க மருந்து நிபுணர்களின் சங்கங்களின் கூட்டமைப்பு (WFSA) ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது, இந்த திட்டம் மியான்மர், வியட்நாம், லாவோஸ், கம்போடியா, இந்தோனேசியா, நேபாளம் மற்றும் பிற போன்ற எல்.எம்.ஐ.சி.களுக்கு சேவை செய்யும் 35 வலி மருத்துவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

அதிக வருமானம் கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும்போது, LMIC களில் உள்ள வலி கல்வித் திட்டங்கள் அதிக விலை தொழில்நுட்பங்கள் அல்லது மேம்பட்ட தலையீடுகளை வலியுறுத்துவதை விட தற்போதுள்ள வளங்களை அதிகரிக்கும் எளிய, குறைந்த செலவு சிகிச்சைகளில் கவனம் செலுத்துகின்றன. இந்த பாடத்திட்டம் IASP பாடத்திட்டத்துடன் நிலையான அறிவு மற்றும் ஒருங்கிணைந்த உள்ளூர் பாரம்பரிய மருத்துவத்தின் பன்முக அடித்தளத்தை வழங்குவதன் மூலம் பயிற்சித் திட்டத்தின் முக்கிய கூறுகளுடன் பின்வருமாறு ஒத்துப்போகிறது;

1. **விரிவான மருத்துவ பயிற்சி மற்றும் இடைநிலை கவனம்:** பயிற்சியாளர்கள் நாள்பட்ட வலி, நோய்த்தடுப்பு பராமரிப்பு, கடுமையான வலி சேவைகள், மனநல மருத்துவம், மறுவாழ்வு மற்றும் தாய் பாரம்பரிய மருத்துவம் ஆகியவற்றில் விரிவான சுழற்சிகளுக்கு உட்படுகிறார்கள். பயிற்சியில் வலி மதிப்பீடு, மருந்தியல் சிகிச்சை மற்றும் அடிப்படை வலி தலையீடுகளுடன் அனுபவம் ஆகியவை அடங்கும். முழுமையான கவனிப்பை வழங்க குறிப்பிடப்பட்ட பல்துறை குழுக்களுடன் இந்த திட்டம் ஒத்துழைக்கிறது.
2. **ஆராய்ச்சி மற்றும் கல்வி எழுத்து:** பயிற்சியாளர்கள் ஆராய்ச்சி நடத்தவும் கல்வி ரீதியாக வெளியிடவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள் [6,7].
3. **மதிப்பீடு மற்றும் பரீட்சை:** எழுதப்பட்ட மற்றும் வாய்வழி தேர்வுகள், வழக்கு விளக்கக்காட்சிகள் மற்றும் நம்பகமான தொழில்முறை செயல்பாடு (EPA) மற்றும் நேரடி கண்காணிப்பு நடைமுறை (DOP)

மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல் போன்ற மருத்துவ வேலையின் போது சரிபார்ப்பு பட்டியல்கள் போன்ற பல முறைகளைப் பயன்படுத்தி பயிற்சியாளர்களின் திறன்களை இந்த திட்டம் மதிப்பிடுகிறது.

**UST மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பீடம் -** முதுகலை **வலி மேலாண்மை திட்டம்**

பிலிப்பைன்ஸின் மணிலாவில் உள்ள யுஎஸ்டி மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பீடத்தின் வலி மருத்துவ மையத்தால் வழங்கப்படும் வலி மேலாண்மை திட்டத்தில் முதுகலை மருத்துவம்/மாஸ்டர் ஆஃப் சயின்ஸ் இரண்டு  வருட பல்துறை தொலைதூரக் கற்றல் முதுகலை பட்டப்படிப்பு பாடமாகும். இது முறையே மருத்துவர்கள் (மாஸ்டர் ஆஃப் மெடிசின்) மற்றும் தொடர்புடைய சுகாதார நிபுணர்களுக்கு (மாஸ்டர் ஆஃப் சயின்ஸ்) வழங்கப்படுகிறது, அவர்கள் தென்கிழக்கு ஆசியா, இந்தியா மற்றும் பாகிஸ்தானின் குடிமக்கள் மற்றும் குடியிருப்பாளர்களாக உள்ளனர் மற்றும் மருத்துவர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களாக வலி மேலாண்மை துறையில் தங்கள் அறிவை மேம்படுத்த விரும்புகிறார்கள்.

வளரும் நாடுகளில் வலி கல்வியை மேம்படுத்துவதற்கான 2006 IASP முன்முயற்சி மானியம் மற்றும் சிட்னி பல்கலைக்கழகத்துடன் உரிம ஒப்பந்தத்துடன், இந்த புதுமையான திட்டம் 2008 இல் தொடங்கப்பட்டது. இந்த முற்றிலும் ஆன்லைன் கல்வித் திட்டத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

1. **மருத்துவத்திற்கான வலி குறித்த IASP பாடத்திட்ட அவுட்லைனை** கடைப்பிடிக்கும் விரிவான மேம்பட்ட, சான்றுகள் அடிப்படையிலான மற்றும் மருத்துவ ரீதியாக தொடர்புடைய பாடத்திட்டம் [3].
2. **இடைநிலை கவனம்: வலியின்** உயிர் உளவியல் பரிமாணங்கள் மற்றும் வலி மேலாண்மைக்கான இடைநிலை அணுகுமுறையைப் படிக்க ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பல்வேறு துறைகள் மற்றும் சிறப்புகளிலிருந்து வருகிறார்கள்
3. **ஆராய்ச்சி:** மாணவர்கள் 2 ஆண்டு திட்டத்தின் முடிவில் ஒரு நிறைவு திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும்

4. **மதிப்பீடு மற்றும் தேர்வு: மாணவர்கள்** ஆன்லைன் விவாதங்கள், சுய மதிப்பீட்டு வினாக்கள், வாய்வழி விளக்கக்காட்சிகள் மற்றும் மருத்துவ சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படும் பணிகளில் பங்கேற்கிறார்கள்.
5. **அடிப்படை கணினி கல்வியறிவு திறன்கள்** மேம்படுத்தப்பட்டு ஆன்லைன் கற்றலை மேம்படுத்துகின்றன.

இன்றுவரை, இந்த திட்டம் 29 முதுகலை மருத்துவம் (மருத்துவர்கள்)) மற்றும் 6 முதுகலை அறிவியல் (2 செவிலியர்கள், 3 பல் மருத்துவர்கள் மற்றும் 1 கைரோபிராக்டர்), 6 பட்டதாரி டிப்ளோமாக்கள் மற்றும் மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற எல்.எம்.ஐ.சி.களுக்கு சேவை செய்யும் 7 பட்டதாரி சான்றிதழ் வைத்திருப்பவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

**முக்கிய முடிவுகள் மற்றும் முன்னாள் மாணவர்களின் சாதனைகள்**

இரண்டு நிறுவனங்களும் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மூலம் வலி நிர்வாகத்தை மேம்படுத்த உறுதிபூண்டுள்ளன, இது நோயாளியின் விளைவுகளை மேம்படுத்துவதையும் LMIC களில் வலி நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வி மற்றும் பயிற்சியின் இறுதி குறிக்கோள் தனிப்பட்ட மருத்துவர்களுக்கு பயிற்சி அளிப்பது மட்டுமல்ல, தலைவர்கள் அல்லது சாம்பியன்களை அவர்களின் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களின் தாயகத்தில் ஒரு சங்கிலி எதிர்வினையை உருவாக்கவும் உருவாக்குவதும் ஆகும்.

முன்னாள் மாணவர்கள் உருமாறும் திறனை நிரூபித்துள்ளனர் மற்றும் தங்கள் நிறுவனங்கள் மற்றும் சமூகங்களில் வலி மேலாண்மையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் முன்னோடியாக உள்ளனர். பல்துறை அணுகுமுறைகளை செயல்படுத்துதல், வலி மேலாண்மைக்கான நெறிமுறைகளை நிறுவுதல் மற்றும் கிராமப்புறங்களில் மருத்துவ பணியாளர்களின் கல்வியை மேம்படுத்த சமூக திட்டங்களை உருவாக்குதல் ஆகியவை எடுத்துக்காட்டுகளில் அடங்கும். கூடுதலாக, பல முன்னாள் மாணவர்கள் அத்தியாவசிய வலி மேலாண்மை திட்டங்களைத்

தொடங்குவதன் மூலமும், வலி விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலமும், தேசிய ஒளிபரப்புகள் மூலம் நோயாளி கல்வியை மேம்படுத்துவதன் மூலமோ அல்லது அந்தந்த நாடுகளில் வலி மேலாண்மையில் தலைவர்களாக நியமிக்கப்பட்டதன் மூலமோ தேசிய மற்றும் சர்வதேச வலி வக்கீலில் ஈடுபட்டுள்ளனர் [8].

## முடிவு

உலகளாவிய வலி மேலாண்மையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு முக்கிய படியாகும் பாடத்திட்டம் ஆகும். IASP பாடத்திட்டம் பொருத்தமானது மற்றும் LMIC இல் பொருந்தும். புதுப்பிக்கப்பட்ட மருத்துவ அறிவு, கலாச்சார மற்றும் வளங்களின் தகவமைப்புடன் பல்துறை அணுகுமுறைகளை இணைப்பதன் மூலம், இந்த பாடத்திட்டம் உலகளாவிய வலி மேலாண்மையை மேம்படுத்துவதற்கான மாதிரிகளாக செயல்படக்கூடும்.

**References**


1. Fishman et al. Core competencies for pain management: Results of an interprofessional consensus summit. Pain Medicine 2013; 14:971-981.
2. Goldberg DS, McGee SJ. Pain as a global public health priority. BMC Public Health. 2011; 11:770.
3. International Association for the Study of Pain. IASP Curriculum Outline on Pain for Physical Therapy. Available at: https://www.iasp-pain.org/education/curricula/iasp-curriculum-outline-on-pain-for-physical-therapy, retrieved 01/03/2025
4. Kopf A, Patel N, editors. Obstacles to pain management in low-resource settings. In: Guide to Pain Management in Low-Resource Settings. International Association for the Study of Pain; 2010. p. 9-12.
5. Morriss WW, Roques CJ. Pain management in low- and middle-income countries. BJA Educ. 2018;18(9):265-270.
6. Sanansilp V, Euasobhon P, Than QV, Rushatamukayanunt P, Jirachaipitak S, Eiamtanasate S. Effectiveness of the Four-Frequency Protocol of Repetitive Peripheral Magnetic Stimulation (rPMS) for Chronic Pain. Siriraj Med J 2022;74(8):518-529.
7. Thapa P, Euasobhon P. Chronic postsurgical pain: current evidence for prevention and management. Korean J Pain. 2018;31(3):155-173.
8. Zinboonyahgoon N. Siriraj Clinical Pain Management Center's report to IASP 2012-2024. (unpublished report)


## ஆசிரியர் இணைப்புகள்:


1. சிரிராஜ் மருத்துவ வலி மேலாண்மை பயிற்சி மையம், மயக்க மருந்து துறை, மருத்துவ பீடம் சிரிராஜ் மருத்துவமனை, மஹிடோல் பல்கலைக்கழகம், தாய்லாந்து

2. வலி மருத்துவ மையம், மயக்க மருந்து மற்றும் பெரிஆபரேட்டிவ் மருத்துவத் துறை, மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பீடம், சாண்டோ டோமஸ் பல்கலைக்கழகம், பிலிப்பைன்ஸ்

**உண்மைத் தாள் மதிப்பாய்வு செய்தவர்:**

- ரோஜர் கௌக் FFPMANZCA, MBChB, மேற்கு ஆஸ்திரேலியா பல்கலைக்கழகம், பெர்த், ஆஸ்திரேலியா
- Quyen Van Than, MD, வலி கிளினிக்கு, மருத்துவமனை 199, மயக்க மருந்துத் துறை, வியட்நாம்

*This factsheet has been translated into Tamil by Mr. Vivekanandan G, former Master of Physiotherapy student, Manipal Academy of Higher Education, Manipal, India.*